பக்கங்கள்: 08
காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 29 செவ்வாய்க்கிழமை 18.10.2022 கதிர் 234

கோபா குழுவில் இருந்து

# விலகினார் சாணக்கியன்; வெற்றிடத்துக்குச் சிறீதரன்



அரச கணக்குகள் பற்றிய குழுவிலிருந்து(கோபா) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு ☞2



# ஈழத் தமிழர் நலனோம்புகைச் செயற்பாடு: தொல். திருமாவளவனுடன் சிறீதரன் பேச்சு

விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவனை அவரது சென்னை அலுவலகத்தில் வைத்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்திய மக்களவை உறுப்பினராக இருந்து கொண்டு ஈழத்தமிழர் நலன்சார் செயற்பாடுகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டுவரும் தொல். திருமாவளவனோடு நடைபெற்ற மேற்படி சந்திப்பில், ஈழத்தமிழர் நலனோம்புகைச் செயற்பாடுகள், தமிழ்த் தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் இந்திய மத்திய அரசின் தற்போதைய நிலைப்பாடு, அந்நிலைப்பாட்டை தமிழர்களுக்குச் சாதகமாக மாற்றிக் கொள்வதற்கு நிலத்திலும், புலத்திலும் மேற்கொள்ள வேண்டிய எத்தனங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன என்று சிறீதரன் எம்.பி. தெரிவித்தார்.

நீண்டகாலத்தின் பின் நடைபெற்ற இந்தச் சிநேகபூர்வமான சந்திப்பு தன்னளவில் நிறைவானதாக அமைந்திருந்தது எனவும் சிறீதரன் எம்.பி. மேலும் கூறினார்.

## பலாலியில் 13 ஏக்கர் விரைவில் விடுவிப்பு

யாழ்., பலாலி அன்ரனிபுரத்தில் இராணுவத்தினர் வசமுள்ள 13 ஏக்கர் அரசகாணியை விடுவிக்குமாறு ஜனாதிபதி செயலகத்தால், யாழ். கட்டளைத் தளபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதற்குப் பாதுகாப்புத் தரப்பினரும் சாதகமான சமிக்ஞையை வெளிப்படுத்தியுள்ளனர்.

ஜனாதிபதி செயலகத்தில் மேலதிக செயலராக இணைக்கப்பட்ட இ. இளங்கோவனின் பங்கேற்புடன் பலாலி பாதுகாப்பு படைத் தலைமையகத்தில் கடந்த வாரம் கூட்டமொன்று நடைபெற்றது.

வலிகாமம் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து தற்போதும் முகாம்களில் வசிக்கும் மக்களை நிரந்தரமாக குடியமர்த்தும் முயற்சிகள் கடந்தகாலங்களில் மேற்கொள்ளப்பட்டி ☞2

மீள்குடியேற்றம், காணிப் பிரச்சினை, காணாமல்போனோர் விவகாரம்

# விரைந்து தீர்வு காண அமைச்சரவை உப குழு

## ஜனாதிபதி தலைமையில் நியமனம்

வடக்கு, கிழக்கு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை விரைந்து தீர்ப்பதற்காகவும், நல்லிணக்கத்தை ஊக்கு விப்பதற்காகவும் அமைச்சரவை உப குழுவொன்றை அமைக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. ☞2



## ‘22’ இற்கு பேராதரவு

விமல் அணி அறிவிப்பு



அரசமைப்புக்கான 22 ஆவதுதிருத்தச்சட்டமூலத்துக்கு முழுமையான ஆதரவு வழங்கப்படும் என்று விமல் வீரவன்ச தலைமையிலான ‘உத்தர லங்கா சபாகய’வின் தேசிய அமைப்பாளர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

எனினும், 22 ஆவது திருத்தச் சட்டமூலத்தை தடுத்து நிறுத்துவதற்கு அமெரிக்காவில் உள்ள காகம் (பஸில் ராஜபக்ச) நடவடிக்கை எடுக்குமா என்ற ஐயம் எமக்கு உள்ளது. எனவே, அமெரிக்காவில் இருந்து ☞2

# பிரதமராகின்றாரா பஸில்?

## அப்படிப் பேச்சு எதுவும் இல்லை என்கிறார் பந்துல



முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவை பிரதமராக நியமிப்பது தொடர்பில் எவ்வித கலந்துரையாடல்களும் இடம்பெறவில்லையென்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் இன்று நடைபெற்ற அமைச்சவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அமைச்சர் பந்துல குணவர்த்தன இதனைக் கூறினார்.

'வெளிநாட்டிடுக்குச் சென்றுள்ள முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ☞2

# அத்தியாவசியப் பொருள்கள் சிலவற்றின் விலை குறைப்பு

## நூறு ரூபாவால் சரிந்தது சீனி

அத்தியாவசியப் பொருட்கள் சிலவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. எனினும், பால்மா விலைக் குறைப்பு தொடர்பில் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை.

- இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும், இன்றைய ஊடக சந்திப்பில் ஊடகவியலாளர் வினவிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும்போது அவர் இதனைக் கூறினார். ☞2

# பாடசாலை நேரத்தில் மாணவர்களை அழைத்துச் சென்று தியேட்டரில் படம்

## வடக்கு கல்வி அமைச்சு அவதானம்

முல்லைத்தீவு வலய பாடசாலை மாணவர்களைத் தனியார் கல்வி நிறுவனம் யாழ்ப்பாணத்திலுள்ள தியேட்டருக்குப் ‘பொன்னியின் செல்வன்’ திரைப்படத்தைப் பார்ப்பதற்கு அழைத்துச் சென்ற சம்பவம் தொடர்பில் வடக்கு மாகாண கல்வி அமைச்சு அவதானம் செலுத்தியுள்ளது. ☞2

# கிழக்கு விவசாயிகளின் பிரச்சினையை நாடாளுமன்றில் வெளிப்படுத்திய சஜித்



கிழக்கு மாகாண விவசாயிகள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இன்று நாடாளுமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

மேற்படி பிரச்சினைகள் தொடர்பில் நிலையியல் ☞8

# நீரில் மூழ்கி சிறுவர்கள் இருவர் பலி

நீராடச் சென்ற சிறுவர்கள் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நவகமுவ - அக்பார்வத்தை - கொர தோட்டைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

தொடர்சியாகப் பெய்து வரும் அடை மழை காரணமாக பாரிய கற்குழியொன்றில் நிரம்பியிருந்த மழை நீரில் நீராடிய போதே சிறுவர்கள் இருவரும் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

14 மற்றும் 15 வயதுடைய சிறுவர்களே ☞2

# போராட்டக்காரர்களை சிறையில் அடைக்காதீர்


## அரசிடம் டலஸ் அணி வலியுறுத்து



பொதுமக்கள் தமது துயரைத் தெரிவிக்க வழி இன்றி பாதைக்கு இறங்கும் போது அவர்களைப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைப்பதில் எந்த நியாயமும் இல்லை.

- இவ்வாறு ☞8

# ஈழத்தமிழர்களுக்காகக் குரல் கொடுக்கும் இராதாகிருஷ்ணனைச் சந்தித்த சிறீதரன்



திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூத்த தலைவர் கே.எஸ். இராதாகிருஷ்ணனை, பாலவாக்கத்திலுள்ள அவரது இல்லத்தில் வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் சந்தித்துக் கலந்துரையாடினார்.

நீண்ட நெடிய தமிழ்த் தேசியப் போராட்ட வரலாற்றில், ☞2

## அத்தியாவசிய..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில், அத்தியாவசிய உணவுப் பொருள்கள் தொடர்பில் நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. அதன்போது, சில அத்தியாவசியப் பொருள்களின் விலை சந்தையில் குறைவடைந்துள்ளது என்று வர்த்தக அமைச்சர் கூறினார்.

அதற்கமைய, பருப்பு கிலோ ஒன்றின் விலை 685 ரூபாவிலிருந்து 398 ரூபாவாகக் குறைவடைந்துள்ளது. நாட்டரிசி கிலோ ஒன்றின் விலை 220 ரூபாவிலிருந்து 165 ரூபாவாகவும், வெள்ளைப் பச்சையரிசி கிலோ ஒன்றின் விலை 210 ரூபாவிலிருந்து 160 ரூபாவாகவும், சீனி கிலோ ஒன்றின் விலை 375 ரூபாவிலிருந்து 275 ரூபாவாகவும், கோதுமை மா கிலோவொன்றின் விலை 395 ரூபாவிலிருந்து 275 ரூபாவாகவும் குறைவடைந்துள்ளது என்று வர்த்தக அமைச்சர் குறிப்பிட்டார். எவ்வாறாயினும், பால்மா விலை குறைப்பு தொடர்பில் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை. இந்த விலை குறைப்பு தொடர்பான சந்தை நிலைமைகளை தொடர்பில் வர்த்தக அமைச்சர் ஊடக சந்திப்பொன்றின் ஊடாக விளக்கமளிப்பார் - என்றார்

## விலகினார்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் விலகியுள்ளார்.

நாடாளுமன்றம் இன்று முற்பகல் 9.30 மணிக்கு பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பு வேளையின் போதே பிரதி சபாநாயகரால் மேற்படி தகவல் வெளியிடப்பட்டது.

சாணக்கியனின் வெற்றிடத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

## பாடசாலை..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வார இறுதி நாள்களான சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் தனியார் கல்வி நிறுவனச் செயற்பாட்டுக்கு இடையூறு ஏற்படாமல் இருப்பதற்காகவே, இவ்வாறு பாடசாலை நாளில் மாணவர்களைத் தியேட்டருக்கு அழைத்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்காக மாணவர் ஒருவரிடமிருந்து 1,500 ரூபா பணம் அறவிடப்பட்டுள்ளது எனவும் அறியமுடிகின்றது.

## பலாலியில்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருந்தன. இதன் ஒரு கட்டமாக பருத்தித்துறைப் பகுதியில் தங்கியுள்ள 76 குடும்பங்களுக்கும் பலாலி அன்ரனிபுரத்தில் உள்ள அரச காணியைப் பெற்றுக் கொடுத்து அவர்களை மீளக்குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பலாலி அன்ரனிபுரத்திலுள்ள 13 ஏக்கர் அரச காணி பாதுகாப்புத் தரப்பினர் வசம் உள்ளது.

அதனை விடுவிக்குமாறு கோரப்பட்டுள்ளது. அதற்கு பாது காப்புத் தரப்பினரும் இணங்கியுள் ளதுடன், இறுதி முடிவு தேசிய பாதுகாப்பு கவுன்ஸிலே எடுக்கும் என்று தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இதுவரையில் பல கட்டங்களாக 20 ஆயிரத்து 872 ஏக்கர் நிலப்பரப்பு விடுவிக்கப்பட்டுள்ளது எனவும், இன்னமும் 3 ஆயிரத்து 27 ஏக்கர் விடுவிக்கப்பட வேண்டியுள்ளது எனவும் யாழ். மாவட்டச் செயலர் க.மகேசன் நேற்று ஊடக சந்திப்பில் தெரிவித்திருந்தார்.

விடுவிக்கப்படாமலுள்ள 3 ஆயிரத்து 27 ஏக்கரில், ஆயிரத்து 617 ஏக்கர் காணியைப் பாதுகாப்புத் தரப்பினருக்கு சுவீகரிப்பதற்கு காணி அமைச்சு ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஈழத் தமிழர்களு..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் காலத்திலிருந்து தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் காலம் வரை ஈழத் தமிழர்களுக்காகக் குரல் கொடுத்துவரும் கே.எஸ் இராதாகிருஷ்ணன், ஈழ விடுதலைப் போர் மௌனிக்கப்பட்ட பின்னரும் கூட, எமது மக்களுக்காக ஓங்கி ஒலிக்கும் ஒரு குரலாகவே இருந்து வருகின்றார் என்று இந்தச்சந்திப்பின் பின்னர் ஊடகங்களிடம் சிறீதரன் எம்.பி. தெரிவித்தார்.

மேற்படி சந்திப்பின் போது தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைத் தீர்வு நோக்கிய அடுத்தகட்ட நகர்வுகள், அதில் இந்தியாவின் வகிபங்கு, அதற்காக தமிழக மற்றும் இந்திய மத்திய அரசுடனான பேச்சுகளை ஆரம்பிப்பதற்கான வழிமுறைகள், தமிழக அரசியல் தலைவர்கள் மற்றும் மாநிலத் தலைவர்களை சந்தித்துக் கலந்துரையாட வேண்டியதன் தேவைப்பாடு உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து பேசப்பட்டன என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மேலும் கூறினார்.

## பிரதமராகின்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்ச நாடு திரும்பியதும் அவரைப் பிரதமராக நியமிக்கத் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன' என்று சிங்கள ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்தி தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் வினவியதற்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் பந்துல குணவர்த்தன மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அத்துடன், பஸில் ராஜபக்சவை பிரதமராக நியமிப்பது தொடர்பில் அமைச்சரவையில் எந்தவித கலந்துரையாடல்களும் மேற்கொள்ளவில்லை. ஆகையினால், அது தொடர்பில் இந்த அமைச்சரவை தீர்மானத்தில் எதனையும் அறிவிக்க முடியாது என்றும் அமைச்சர் பந்துல குணவர்த்தன மேலும் தெரிவித்தார்.

## நீரில் மூழ்கி..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு உயிரிழந்துள்ளனர். சிறுவர்களின் சடலம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

## விரைந்து..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இந்தக் குழுவில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன, அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, அலி சப்ரி, விஜயதாஸ ராஜபக்ச ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இலங்கையில் வாழும் பல்லின மக்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதற்காகவும், வடக்கு, கிழக்கில் போருக்குப் பின்னரான மீள்குடியேற்றம், காணி மற்றும் காணாமல்போனார் விவகாரம் தொடர்பில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்குவதற்காகவுமே இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை ஜனாதிபதி முன்வைத்துள்ளார்.

## 22 இற்கு..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதிக்கு அழைப்பு வராமல் இருக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றோம் எனவும் கம்மன்பில கூறினார்.

22 ஆவது திருத்தச் சட்டமூலம் தோற்குமானால் அதுஜனநாயகத்துக்கு விழுந்த அடியாக அமையும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

**விளம்பரத் தொடர்புகளுக்கு -**
**தொலைபேசி இலக்கம்-**
**076 443 8622**



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## சீனாவுக்கு எதிராகக் கிளர்வோம்!

இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையை ஒட்டிய தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை நோக்குபவர்கள் ஒரு விடயத்தை இப்போது அவதானிக்க முடியும்.

இறைமையை மீட்கவும், உரிமையைப் பெறவும் கொதித்தெழுந்த தமிழர்கள் இன்று இருப்பதே போதும், எஞ்சியவற்றையாவது காப்போம், 'பிச்சை வேண்டாம் நாயே பிடி' என்ற நிலைமைக்கு வந்து விட்டார்கள் என்பதுதான் அது.

இந்த நிலைமைக்கு யார் காரணம், என்ன காரணம், ஏன் இப்படி நேர்ந்தது என்பவை எல்லாம் வேறு விடயங்கள். ஆனால் இதுதான் யதார்த்தக் களப்புற நிலைமை. இது மறுக்க முடியாத உண்மை.

எஞ்சியிருக்கின்ற தமிழர் தாயகத்தை நமது பூர்வீகப் பிரதேசமாகக் காப்பாற்ற முடியுமா, அதுவும் பேரினவாத ஆக்கிரமிப்புப் பூதத்தினால் விழுங்கப்பட்டு விடுமா என்ற அச்ச நிலையில் தமிழினம் தடுமாறிக் கொண்டிருக்கின்றது என்பது உண்மை.

இந்தப் பின்புலத்தில்தான் வட தமிழர் தேசத்தில் குடா நாட்டுப் பகுதிகளின் கரையோரங்களை அண்டி, சீன வல்லாதிக்கம் கால் பதிக்கும் ஆபத்து ஏது நிலைகள் பற்றிய எச்சரிக்கைகள் வெளியாகி இருக்கின்றன.

இந்தப் பத்தியில் இன்று காலை ஏற்கனவே நாம் சுட்டிக் காட்டியபடி, வடக்கு தமிழர் தாயகத்தில் சீனர்களின் பிரசன்னம் அதிகரித்திருப்பதும், அது சத்தம் சந்தடி இல்லாமல் நிலத்தின் கீழான வேரோடல் போன்று பரவி, தனது நிலையை ஸ்திரப்படுத்தி வருவதும் தமிழ் மக்களால் உணரப்பட்ட உண்மை.

அதற்குப் பின்னால் புதைந்து கிடக்கும் காரண, காரியங்கள், நோக்குகள், இலக்குகள், எண்ணங்கள், திட்டங்கள் போன்றவற்றை சாதாரண – சாமனிய – தமிழ் மக்கள் புரிந்து கொள்ள முடியாவிட்டாலும், இதன் பெறுபேறுகள் தமிழர் இருப்புக்கே மிக மிக ஆபத்தானது என்பது மட்டும் உள்ளங்கை நெல்லிக்கனி.

இந்தியாவுக்கு எதிரான வல்லாதிக்க போட்டியில் பாரத தேசத்திற்கு அச்சுறுத்தலாக இங்கு நமது தமிழர் தாயக மண்ணில் சீனா நிலை கொண்டு, துஷ்ட காரியங்களை முன்னெடுக்க இடம் அளிப்பது, தமிழர் தாயகத்தின் இருப்புக்கு இன்னும் பேராபத்தை ஏற்படுத்திவிடும் என்பதுதான் அச்சம் தரும் உண்மை நிலைமையாகும்.

இதிலிருந்து நாம் எப்படி மீளுவது, தமிழர் தேசத்தை – தமிழர் தாயகத்தை – காப்பாற்றுவது என்பவை குறித்து விரைந்தும் விரிவாகவும் ஆராய்ந்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.

வடக்கு தமிழர் தாயகத்தில் சீனாவின் காலூன்றலை எதிர்த்து முறியடிக்கும் ஒரே திட்டத்துக்காக வேனும் தமிழர் தரப்புகள் ஒன்றுபட்டு மேலெழ வேண்டும்.

கட்சிகள், கூட்டுக்கள், அமைப்புகள், அணிகள் என்ற பிளவுகள் தாண்டி, தமிழர் தேசியம் பேசும் கட்சிகள் உட்பட தமிழ்க் கட்சிகள் எல்லாம் பிற அரசியல் வேற்றுமைகள், முரண்பாடுகளை மறந்து, ஒன்றுபட்ட சக்தியாய் இவ்விடயத்தில் எழ வேண்டிய கட்டாயம் உள்ளது.

இந்த முயற்சியை ஆரம்பித்து முன்னெடுக்க போகின்ற தமிழர் தரப்பு எது?

# வடக்கில் போதைப்பொருள் பாவனை அதிகரிப்பு: அமைச்சரவை கூட்டத்தில் டக்ளஸ் பிரஸ்தாபிப்பு!



வடக்கு மாகாணத்தில் அதிகரித்துள்ள போதைப்பொருள் பாவனை தொடர்பாக இன்று (செவ்வாய்க்கிழமை) நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

மேலும், போதைப் பொருளுக்கு அடிமையானவர்களை அதிலிருந்து மீட்கும் வகையிலான சட்ட ஏற்பாடுகளை நீதிமன்றத்துக்கு வழங்குதல் மற்றும் புனர்வாழ்வு மையம் ஒன்றை வட பகுதியில் உருவாக்குதல் போன்றவற்றின் அவசியம் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் வலியுறுத்தப்பட்ட நிலையில், மேற்படி கருத்தை ஏனைய அமைச்சர்களும் ஏற்றுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் வடக்கு கிழக்கு பிரதேசத்தில் தீர்க்கப்பட வேண்டிய விடயங்களை தொடர்பில் ஆராயும் நோக்கில் ஜனாதிபதி தலைமையில் விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தலைமையில் இன்று (செவ்வாய்க்கிழமை) நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள குறித்த குழுவில், பிரதமர் தினேஸ் குணவர்தன, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

காணாமல் போனோர் விவகாரம், அரசியல் கைதிகள் விவகாரம், காணி தொடர்பான பிணக்குகள் உட்பட வடக்கு கிழக்கு பகுதி மக்களால் அடையாளப்படுத்தும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து பரிகாரம் வழங்குவதே இக்குழுவின் நோக்கமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# நீச்சல் தடாகத்தில் இருந்து வெளிநாட்டவர் சடலமாக மீட்பு

வாதுவையில் அமைந்துள்ள 5 நட்சத்திர ஹோட்டல் நீச்சல் தடாகத்தில் இருந்து வெளிநாட்டவர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

தென் கொரியாவைச் சேர்ந்த சுற்றுலா பயணி ஒருவரே இன்று (செவ்வாய்க்கிழமை) காலை இவ்வாறு ஹோட்டலில் உள்ள நீச்சல் தடாகத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். நேற்று (திங்கட்கிழமை) மாலை ஹோட்டலுக்கு வருகை தந்த 43 வயதான குறித்த வெளிநாட்டவர் இன்று காலை நீச்சல் தடாகத்தில் இறந்தநிலையில் காணப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த மரணம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை வாதுவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# உலகளாவிய பட்டினி சுட்டெண் 64 ஆவது இடத்தில் இலங்கை!

2022ஆம் ஆண்டில் உலகளாவிய பட்டினி சுட்டெண்ணில் இலங்கை 64ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

இந்த ஆண்டு, 121 நாடுகள் பட்டினி சுட்டெண்ணில் இணைக்கப்பட்டுள்ளன. இந்த சுட்டெண்ணின்படி 13.6 புள்ளிகளை பெற்றுள்ள இலங்கை 64ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

கடந்த ஆண்டில் பட்டினி சுட்டெண்ணில் 116 நாடுகள் இடம்பெற்றிருந்ததுடன், அதில் இலங்கை 65 ஆவது இடத்தில் காணப்பட்டது.

வளரும் நாடுகளைப் பயன்படுத்தி அயர்லாந்து மற்றும் ஜெர்மனியில் உள்ள இரண்டு அமைப்புகளால் ஆண்டுதோறும் இந்த உலகளாவிய பட்டினி சுட்டெண் தயாரிக்கப்படுகிறது.

நாடுகளில் உணவு பற்றாக்குறை, சரியான ஊட்டச்சத்து இல்லாமை, சரிவிகித உணவு வழங்கும் திறன், வயதுக்கு ஏற்ப குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் குழந்தை இறப்பு விகிதம் போன்ற பிரச்சினைகள் இங்கு பரிசீலிக்கப்படுகின்றன.

இந்த ஆண்டு பட்டினி குறியீட்டில் தெற்காசிய நாடுகளில் இந்தியா 101ஆவது இடத்தில் இருந்து 107ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்பு தாமரைக் கோபுரத்தை பார்வையிடும் நேரத்தில் மாற்றம்!



கொழும்பு தாமரை கோபுரத்தை பொதுமக்கள் பார்வையிடும் நேரத்தை கொழும்பு தாமரை கோபுர முகாமைத்துவ நிறுவனம் மாற்றியுள்ளது.

அதன்படி, திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை நுழைவுச்சீட்டுக்கள் விற்பனை செய்யப்படும் என்றும் பொதுமக்கள் இரவு 10 மணி வரை கோபுரத்தை பார்வையிடலாம் என்றும் அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

அதேநேரம், சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில், காலை 9 மணி முதல் இரவு 10 மணி வரை நுழைவுச்சீட்டுக்கள் விற்பனை செய்யப்படும் என்றும் பொதுமக்கள் தாமரை கோபுரத்தை இரவு 11 மணி வரை பார்வையிட அனுமதிக்கப்படுவார்கள் என்றும் அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

பாடசாலை சிறுவர்களுக்கான சிறப்புச் சுற்றுலாக்கள் மற்றும் அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் உத்தியோகபூர்வ வருகைகள் முன்கூட்டியே முன்பதிவு செய்யப்பட வேண்டும் என்றும் அந்த நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# உக்ரைன் மீது ரஷ்யா தீவிரமான தாக்குதல்



## பல பகுதிகளிலும் மின் துண்டிப்பு

கீவ், ஒக்.18

உக்ரைன் மின் உற்பத்தி நிலையத்தின் மீது ரஷ்யா நடத்திய ஏவுகணைத் தாக்குதல்களினால் உக்ரைனின் நூற்றுக்கணக்கான பகுதிகள் இருளில் மூழ்கியுள்ளன என அந்நாட்டு பிரதமர் கருத்து வெளியிட்டுள்ளார்.

கிரீமியாவை ரஷ்யாவுடன் இணைக்கும் பாலத்தில் கடந்த சில நாள்களுக்கு முன்பு நடந்த குண்டு வெடிப்புக்கு உக்ரைன்தான் காரணம் என குற்றம் சாட்டிய ரஷ்யா, உக்ரைன் மீதான தாக்குதல்களைதீவிரப்படுத்தியதுடன்,போர்தொடங்கியதில் இருந்து, இதுவரை இல்லாத அளவுக்கு கடந்த வாரம் உக்ரைன் தலைநகர் கீவ் மீது பயங்கரமான தாக்குதலை நடத்தியது. கீவ் நகரில் உள்ள மின் உற்பத்தி நிலையத்தின்மீதும் ரஷ்யபடைகள் ஏவுகணை வீசி தாக்குதல் நடத்தின.

இதில் அங்கு மிகப்பெரிய அளவில் தீப்பற்றியமையால் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டது. எனினும் இந்தத் தாக்குதலில் உயிரிழப்போ அல்லது யாருக்கும் காயமோ ஏற்படவில்லை என கீவ் நகர ஆளுநர் ஒலெக்சி குலேபா தெரிவித்தார்.

மக்கள் வசிக்கும் பகுதிகளின் மின்சாரம் மற்றும் குடிநீர் இணைப்பைத் துண்டிக்க ரஷ்ய ராணுவம் முயற்சிப்பதாக அவர் குற்றம் சாட்டினார். மின் உற்பத்திப் பாதிப்பை சரி செய்யும் பணிகள் நடந்து வருகின்றன என அதிகாரிகள் தெரிவித்தனர்.

கீவ் நகரில் வசிப்பவர்கள் மற்றும் டினிப்ரோ பெட்ரோவ்ஸ்க் மற்றும் சுமி பகுதிகள் என 3 பிராந்தியங்களை சேர்ந்த மக்கள் மாலை நேரங்களில் மின் சாரத்தைக் குறைவாக பயன்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், இந்த தாக்குதல் குறித்து உக்ரைன் பிரதமர் டெனிஸ் ஷ்மிகல் நேற்றுக் கருத்து வெளியிடுகையில், உக்ரைனின் 3 பிராந்தியங்களில் உள்ள எரிசக்தி உள்கட்டமைப்பு மீது ரஷ்ய பயங்கரவாதிகள் மீண்டும் தாக்குதல் நடத்தினர். இதன் காரணமாக, நாடு முழுவதும் நூற்றுக்கணக்கான நகரங்கள் மற்றும் கிராமங்களுக்கு மின்சாரம் மற்றும் மின் விநியோக சேவை பாதிக்கப்பட்டுள்ளது. மத்திய டினிப்ரோபெட்ரோவ்ஸ்க் பிராந்தியத்திலும் கிழக்கில் சுமி பிராந்தியத்திலும் 'முக்கியமான உள்கட்டமைப்பு' மீது ரஷ்யா தாக்குதல்களை நடத்தியமையுடன் கீவ்வில் ஐந்து டிரோன் தாக்குதல்களை நடத்தியுள்ளன. இந்நிலையில் மின் உற்பத்தி பாதிப்பை சரி செய்யும் பணிகள் நடந்து வருகின்றன என்று தெரிவித்தார்.

# பாகிஸ்தான் இடைத்தேர்தல்களில் இம்ரான்கானின் கட்சி பெருவெற்றி

## அதனால் விரைவில் பொதுத் தேர்தல் நடத்தக் கோருகிறார்

இஸ்லாமாபாத், ஒக்.18

பாகிஸ்தான் இடைத்தேர்தலில் முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் கட்சி பெரும்பான்மையான இடங்களில் வெற்றி பெற்றுள்ளது.

பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாப் (பிடிஐ) தலைவரும், முன்னாள் பிரதமருமான இம்ரான் கானின் கட்சியைச் சேர்ந்த 131 சட்டமன்ற உறுப்பினர்கள் ஏப்ரல் மாதம் நாடாளுமன்றத்தின் கீழ்சபையிலிருந்து ராஜினாமா செய்த நிலையில், அந்த இடங்களுக்கு கட்டம் கட்டமாக தேர்தல் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், நேற்று அறிவிக்கப்பட்ட முடிவுகளின் படி, இடைத்தேர்தலில் இம்ரான் கானின் பெரும்பான்மையான இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. பாகிஸ்தான் தேர்தல் ஆணையத்தின் தரவுகளின்படி, இம்ரான் கான் கட்சியினர் மொத்தம் இடைத்தேர்தல் நடந்த எட்டு இடங்களில்7 இல் போட்டியிட்டு 6 இடங்களில் வெற்றி பெற்றனர்.

இடைத்தேர்தலில் பாரிய வெற்றி பெற்ற தன்மூலம் பாகிஸ்தான் அரசியலில் இம்ரான்



கான்கட்சிக்குமக்கள்ஆதரவுபெருகியிருக்கின்றது என்று கூறப்படுகின்றது.

இந்நிலையில், பாகிஸ்தானில் விரைவில் பொதுத்தேர்தல் வர வேண்டும் என்று இம்ரான் கான் கோரிக்கை வைத்துள்ளார். பாகிஸ்தானில் பொதுத்தேர்தலை முன்கூட்டியே - உடனேயே - நடத்த வேண்டும் எனவும் அவரது கட்சி தலைவர்கள் கோரியுள்ளனர்.



# அனு ஆயுதத் தாக்குதல் தடுப்பு ராணுவப் பயிற்சி ஆரம்பமானது

## முப்பது நாடுகள் இணைவு

ஃபிரஸ்ஸல்ஸ்,ஒக்.18

நேட்டோ அமைப்பின் அணு ஆயுத தாக்குதல் தடுப்பு இராணுவ பயிற்சி மேற்கு ஐரோப்பாவில் நேற்று ஆரம்பமாகியுள்ளது. மேற்கத்திய நாடுகளின்-ராணுவ கூட்டமைப்பான நேட்டோ தனது வழக்கமான அணுசக்தி தடுப்பு இராணுவ பயிற்சி, ரஷ்யா உக்ரைன் மீது போர் ஆரம்பிப்பதற்கு முன்பு திட்டமிடப்பட்டது. இந்நிலையில், நேற்று இந்த-ராணுவ ஒத்திகைப் பயிற்சி தொடங்கியது. மேற்கு ஐரோப்பா, பெல்ஜியம், இங்கிலாந்து வான்வெளி மீது நடைபெறும் இப்பயிற்சியில் மொத்தம் 60 விமானங்கள் வரை பங்கேற்கின்றன. முப்பது நாடுகள் இணைந்துள்ள இந்த இராணுவ ஒத்திகை பயிற்சி இம்மாதம் 30 ஆம் திகதி வரை நடைபெறும்.

நேட்டோ பொதுச்செயலாளர் ஜென்ஸ் ஸ்டோல்டன்பெர்க், இந்த பயிற்சியை கைவிட வேண்டும் என்ற கருத்தை நிராகரித்துள்ளார்.

அவர் கூறுகையில், உக்ரைனில் நடக்கும் போர் காரணமாக, நாங்கள் திடீரென்று இப்போது இந்த பயிற்சியை ரத்துச் செய்தால் அது மிகவும் தவறானதாக அமையும். போர் வரும் முன்னர், முன்னெச்சரிக்கையாக தடுப்பதே நேட்டோவின் இராணுவத்தின் வலிமை. நாங்கள் விழிப்புடன் இருக்கிறோம் என்றார்.

# உக்ரைனுக்கு மேலும் இராணுவ உதவிகள் வழங்குவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் முடிவு

லக்சம்பர்க், ஒக்.18

உக்ரைனுக்குமேலதிகமாகஇன்னமும் இராணுவ ஆதரவௌ வழங்கவுள்ளதுடன், படைகளுக்கு பயிற்சியளிக்கவும் முடிவு செய்துள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது.

உக்ரைன் மீது கடந்த பெப்ரவரி மாதம் ரஷ்யா தனது இராணுவப் படைகளை அனுப்பித் தாக்குதலைத் தொடங்கியது.

ரஷ்யாவின் தாக்குதலுக்கு உக்ரைன் தொடர்ந்து பதிலடி கொடுத்து வருகின்ற நிலையில்,இந்தப்போரில்இருதரப்பிலும் மிகப்பெரிய அளவில் உயிர்சேதம் ஏற்பட்டுள்ளது.

இந்த போரில் உக்ரைன்ராணுவத்திற்கு இங்கிலாந்து, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் ராணுவ உதவிகளைச் செய்து வருகின்றன. மேலும் ரஷ்யாவிடம் போரில் இழந்த சில பகுதிகளை உக்ரைன்ராணுவம் மீட்டுள்ளது.

இந்நிலையில், ஐரோப்பிய ஒன்றியம் உக்ரைனுக்கு இராணுவ ஆதரவை அதிகரிக்க முடிவு செய்துள்ளது.

அதன்படி, ஐரோப்பிய ஒன்றியம் 15,000 உக்ரேனிய வீரர்களுக்கு பயிற்சி அளிக்க உள்ளதுடன், ஆயுதங்களுக்காக 500 மில்லியன் யூரோக்களை கூடுதலாக வழங்க உள்ளது. ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகள் லக்சம்பேர்க்கில் நடைபெறும் கூட் டத்தில் இது தொடர்பான முக்கிய முடிவுகளில் கையெழுத்திடும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. மேலும், அடுத்த மாதம் முதல் உக்ரேனிய வீரர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.



# காங்கிரஸ் தலைவர் தேர்தல் நிறைவு 90வீத வாக்குப் பதிவு: முடிவு நாளை!




புதுடெல்லி, ஒக்.18

காங்கிரஸ் கட்சியின் தலைமை பதவிக்கான தேர்தல் நேற்றையதினம் நடைபெற்று முடிந்துள்ளது. இந்தத் தேர்தலில் கட்சியின் மூத்த தலைவர்களான மல்லிகார்ஜுன கார்கே மற்றும் சசி தரூர் இடையே நேரடி போட்டி நிலவியது. 22 ஆண்டுகளுக்கு பிறகு நடைபெற்ற இந்தத் தேர்தலில், காந்தி-நேரு குடும்பத்தில் இருந்து சோனியா காந்தி, ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி என யாருமே போட்டியிடவில்லை. 24 ஆண்டுகளுக்கு பிறகு அந்த குடும்பத்தில் இருந்து வராத ஒருவர் இந்தத் தேர்தல் மூலம் தலைவராகத் தேர்வாகவுள்ளார்.

டெல்லியில் காங்கிரசின் இடைக்கால தலைவர் சோனியா காந்தி மற்றும் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி வாக்களித்தனர். இதேபோன்று நாடு முழுவதும் அமைக்கப்பட்ட வாக்கு மையங்களில் வாக்கு பதிவுகள் நடைபெற்றன. வாக்கு பதிவுகள் இன்று மாலை நிறைவடைந்துள்ள நிலையில், நாளையதினம் வாக்குகள் எண்ணப்பட்டு தேர்தலில் வெற்றி பெற்றவர் யாரென்ற முடிவுகள் அறிவிக்கப்படும்.

இதுபற்றி அக்கட்சியின் மத்திய தேர்தல் அமைப்பு தலைவர் மற்றும் முன்னாள் எம்.பி.யான மதுசூதன் மிஸ்திரி தெரிவிக்கையில், மொத்தமுள்ள 9,900 பிரதேச காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர்களில் 9,500 பேர் வாக்களித்து உள்ளனர். மாநிலங்கள் முழுவதும் 96 வீத வாக்குப் பதிவு நடந்து உள்ளது. அசம்பாவித சம்பவம் எதுவும் நடைபெறவில்லை. மேலும், சிறு மாநிலங்களில் ஏறக்குறைய 100 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன. அனைத்து இடங்களிலும் 90 சதவீதத்திற்கும் கூடுதலான வாக்குகள் பதிவாகி உள்ளன. இதில் எங்களுக்கு அதிக திருப்திக்குரிய விடயம் என்னவெனில், அனைத்து மாநிலங்களிலும் வாக்கு சாவடி அமைக்கப்பட்ட பகுதிகளில், விரும்பத்தகாத சம்பவங்கள் எதுவும் அறியப்படவில்லை. இது ஒரு பெரிய சாதனை. தேர்தல் வெளிப்படையான நடைமுறையில், அமைதியான முறையில் நடந்து முடிந்து உள்ளது என அவர் கூறியுள்ளார்.

அத்துடன், உள்கட்சி ஜனநாயகம் என்றால் என்னவென்று, காங்கிரஸ் கட்சியால் வெளிப்படுத்தப்பட்டு உள்ளது. இதில் இருந்து பிற கட்சிகளும் பாடம் கற்று கொள்ள வேண்டும். கற்று கொள்ள முடியும் எனவும் அவர் கூறியுள்ளார்.

# ஒரு வீட்டில் ஒரு நாய் மட்டுமே வளர்க்கலாம்

## உத்தர பிரதேசம் காசியாபாத்தில் நடைமுறை



காசியாபாத்,ஒக்.18

வளர்ப்பு நாய் கடிக்கு பொது மக்கள் பாதிக்கப்பட்டதன் எதிரொலியாக, பிட்புல் உள்ளிட்ட 3 இனத்தை சேர்ந்த நாய்களை செல்லப்பிராணியாக வளர்க்க காசியாபாத் மாநகராட்சி தடை விதித்துள்ளது. இம்மாத தொடக்கத்தில் உத்தரப்பிரதேசம் மாநிலம் காசியாபாத்தில் லிப்டில் சென்ற நபரையும், குடியிருப்பு வளாகத்தில் சிறுவனையும் வளர்ப்பு நாய் கடித்துக் குதறிய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

பிட்புல் வகை நாய் கடித்ததில் சிறுவனின் உடலில் 150 தையல்கள் போடப்பட்டன. இந்த நிலையில், வளர்ப்புநாய்களுக்கான கட்டுப்பாடுகளை காசியாபாத் மாநகராட்சி வெளியிட்டுள்ளது. அதன குடிப்படையில், பிட்புல், ரோட்வெய்லர், டோகோ அர்ஜென்டினோ வகை நாய்களை செல்லப்பிராணி குகளாக வளர்க்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஒரு வீட்டில் ஒரு நாய் மட்டுமே செல்ல பிராணியாக வளர்க்க வேண்டும், நாய் வளர்ப்பதற்கான உரிமத்தினை மாநகராட்சியில் இருந்து பெற்றிருக்க வேண்டும், வெளியே அழைத்து வரும் நாய்களுக்கு அதன் வாய்ப்பகுதியில் கண்டிப்பாக வாய்மூடி அணிந்திருக்க வேண்டும் என்பன போன்ற கடுமையான கட்டுப்பாடுகளை காசியாபாத் மாநகராட்சி விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# பயங்கரவாதத் தாக்குதல்களைக் கண்டித்து ஸ்ரீநகரில் பண்டிட்டுகள் நேற்று போராட்டம்

ஸ்ரீநகர்,ஒக்.18

ஜம்மு மற்றும் காஷ்மீரில் சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்பட்டு மூன்றாண்டுகள் ஆன நிலையில், இந்த ஆண்டில் காஷ்மீரி பண்டிட்டுகள் மீது நடத்தப்படும் பயங்கரவாத தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன. காஷ்மீரின் சோபியான் மாவட்டம் சவுதரி குண்ட் பகுதியை சேர்ந்த காஷ்மீரி பண்டிட் ஒருவரை கடந்த 15 ஆம் திகதி பயங்கரவாதிகள் படுகொலை செய்திருந்தனர்.

தனது வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்த பூரண் கிருஷ்ணன் பட் என்பவர் மீது துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டு பயங்கரவாதிகள் தப்பிச்சென்றனர். இந்தத் துப்பாக்கிச்சூடு சம்பவத்தை தொடர்ந்து தாக்குதல் நடந்த பகுதியை சுற்றிவளைத்த பாதுகாப்பு படையினர் தப்பியோடிய பங்கரவாதிகளை தேடி வருகின்றனர்.

இந்த தாக்குதல் சம்பவம் காஷ்மீரி பண்டிட்டுகள் மத்தியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. இந்த நிலையில், இந்த தாக்குதல் சம்பவத்தை கண்டித்து ஸ்ரீநகரில் உள்ள அனைத்துக் கட்சி ஹூரியத் அலுவலகத்தின் முன் காஷ்மீரி பண்டிட்டுகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் போராட்டம் நடத்தியுள்ளமையுடன், அந்த அலுவலகத்தின் சுவர் மற்றும் பதாகைகள் மீது இந்தியா என எழுதி போராட்டம் நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.சி.சி. தலைவர் தேர்வில் போட்டியிட கங்குலிக்கு அனுமதிக்க தர வேண்டும்

## மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி கோரிக்கை



புதுடெல்லி, ஒக்.18

ஐ.சி.சி. எனப்படும் சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் தலைவர் தேர்தலில் போட்டியிட சவுரவ் கங்குலிக்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று பிரதமர் மோடிக்கு மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி கோரிக்கை விடுத்துள்ளார்.

கொல்கத்தா விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த மம்தா பானர்ஜி -கங்குலி மிக பிரபலமான நபர். இந்திய அணியின் அணித் தலைவராகவும் இருந்துள்ளார்.

சவுரவ் கங்குலி மேற்குவங்காளத்தின் பெருமை மட்டும் கிடையாது. அவர் இந்தியாவின் பெருமையும் கூட. அவர் ஏன் இவ்வளவு நியாயமற்ற முறையில் ஒதுக்கப்பட்டார்.

கங்குலி மீது கவனம் செலுத்தி அவரை ஐ.சி.சி. தேர்தலில் போட்டி யிட அனுமதி அளிக்க வேண்டும் என்று நான் பிரதமர் மோடியிடம் கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

ஐ.சி.சி. தலைவர் பதவிக்கு வரும் 20 ஆம் தேதி வேட்பு மனு தாக்கல் செய்யப்பட வேண்டும் என்கின்ற நிலையில், ஐ.சி.சி. தலைவர் பதவிக்கு கங்குலி போட்டியிட்டால் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையான பி.சி.சி.ஐ. ஆதரவுடன் கங்குலி எளிதில் வெற்றி பெற வாய்ப்புள்ளதாக சொல்லப்படுகிறது.

# 'ஒரே நாடு; ஒரே உரம்' திட்டம் ஆரம்பித்து வைத்தார் மோடி!

புதுடெல்லி, ஒக்.18

மத்திய அரசு 'பிரதம மந்திரி இந்திய வெகுஜன உரத் திட்டம்' என்ற ஏற்பாட்டின் கீழ் 'ஒரே நாடு ஒரே உரம்' என்ற புதிய திட்டத்தை தொடங்கியுள்ளது. புதுடெல்லியில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தில், 2 நாட்கள் நடைபெறும் 'விவசாயிகள் சம்மேளனம் 2022' நிகழ்ச்சியை பிரதமர் மோடி நேற்று ஆரம்பித்து வைத்தார்.



இந்நிகழ்ச்சியில், 'ஒரே நாடு ஒரே உரம்' என்ற புதிய திட்டத்தை பிரதமர் மோடி தொடங்கி வைத்துள்ளார். இத்திட்டத்தின் கீழ், அனைத்து மானிய உரங்களையும் வழங்கும் நிறுவனங்கள் 'பாரத்' என்ற ஒரே பெயர் பொருந்திய குறியீட்டின் கீழ் சந்தைப்படுத்துவது கட்டாயமாகும். மேலும், மானிய விலையில் வழங்கப்படும் மண் உரங்கள் - யூரியா, டி-அம்மோனியம் பாஸ்பேட் (டிஏபி), மியூரேட் ஆப் பொட்டாஷ் (எம்ஓபி) மற்றும் என்பிகே போன்ற அனைத்தும் நாடு முழுவதும் 'பாரத்' என்ற ஒரே பெயர் பொருந்திய குறியீட்டின் கீழே சந்தைப்படுத்துவது கட்டாயமாகும்.

மேலும், இந்நிகழ்ச்சியில், விவசாயிகள் நிதி திட்டத்தின் 12 ஆவது பாகத்தை பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்டு வைத்ததுடனள், 600 விவசாய சம்ருத்தி கேந்திராக்களையும் திறந்து வைத்துள்ளார். இந்த கிசான் சம்ருத்தி கேந்திராக்கள், ஒரே இடத்தில் விவசாயத் துறை தொடர்பான பல சேவைகளைப் பெறக்கூடிய இடமாக விளங்கும்.

மேலும் விவசாயிகளுக்கு விவசாயத் துறை தொடர்பான பொருடள்களை ஒரே இடத்தில் வழங்கும் இடமாக செயல்படவுள்ளது.

நாட்டில் உள்ள 3.3 லட்சத்திற்கும் அதிகமான உர சில்லறை விற்பனைக் கடைகளை 'பிரதமர் விவசாய சம்ருத்தி கேந்திராக்கள்' ஆக மாற்ற மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. அத்துடன் இந்நிகழ்ச்சியில் உரங்கள் பற்றிய டிஜிட்டல் வடிவ இதழான 'இந்தியன் எட்ஜ்' ஐ பிரதமர் மோடி தொடங்கி வைத்தமையும் குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# கோணேஸ்வர ஆலய ஆக்கிரமிப்பு யாழ். மாநகர சபையும் கண்டனம்!

யாழ்ப்பாணம் ,ஒக்.18

திருகோணமலை கோணேஸ்வரம் ஆலயப் பகுதியில் இடம்பெறும். தொல்லியல் திணைக்களத்தின் இடையூறுக்கு யாழ்ப்பாணம் மாநகர சபையில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஒகடோபர் மாத கூட்டம் நேற்றைய தினம் சபை மண்டபத்தில் முதல்வர் வி.மணிவண்ணன் தலைமையில் இடம்பெற்றது. இதன்போதே மேற்படி தீர்மானம் தொடர்பான மாநகர முதல்வர் வி.மணிவண்ணனால் முன்மொழி யப்பட்ட போது உறுப்பினர் ந.லோகதயாளனால் வழிமொழி யப்பட்டது.

திருகோணமலை கோணேஸ்வர ஆலயப் பகுதியில் மதவிரோதமான செயலபாடுகளை மேற்கொண்ட வகையில் தொடர்ந்தும் இடையூறாக – ஆக்கிரமிப்பாக – அமைந்துள்ள 55 கடைகளையும் வேறு பிரதேசத்திற்கு மாற்றி வழங்க ஆலய நிர்வாகம் முன் வந்தபோதும்



அதற்கு மாறாக வர்த்தகர்கள் செயலபடுவதனால் திரு மலையின் மட்டுமன்றி ஒட்டுமொத்த தமிழ் மக்களின் மனதையும் நிந்திக்கும் இச் செயற்பாட்டை வடக்கின் ஒரேயொரு மாநகர சபை என்ற வகையில் கண்டிப் பதோடு சைவத்தின் பெருமையைக் காக்க தொல் லியல்த் திணைக்களமும் ஒத்துழைக்க வேண்டும் என முதல்வர் முன்மொழிந்தார்.

திருகோணேஸ்வரம் லயத்திறகுச் செல்லும் பக்தர்களிற்கு இடையூறாக வீதியின் இரு மருங்கிலும் கடை அமைத்திருப்பதோடு மத விவகாரங்களிற்கு விரோதமான செயல்பாடும் இடம்பெறு கின்றது.

இதேநேரம் ஆலயத்தின் தேவைக்காக ஒரு பக்கெற் சீமேந்து கொண்டு சென்றாலும் சோதனையின் பின்னரே அனுமதிக்கப்படும் நிலையில் அந்த ஆலயத்தின் இருப்பு தொடர்பான விரோத செயல்களை தொல்லியல்த் திணைக்களமும் கைவிட வேண்டும் எனத் தெரிவித்து பிரேரணையை உறுப்பினர் ந.லோகதயாளன் வழிமொழிந்தார்.

# போசாக்கான பிஸ்கட்டுக்கள் கல்முனையில் பரிசீலனைக்கு





(நூருல் ஹுதா உமர்)

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் முன்மொழியப்பட்ட போசாக்கான உணவுத்திட்ட பிரேரணைக்கமைவாக கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸினால் போசாக்கான பிஸ்கட்டுக்கள் பரிசீலனைக்காக வழங்கப் பட்டன.

கல்முனை பிராந்திய ஆயுள்வேத பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.ஏ நபீலின் மருந்து உற்பத்திப்பிரிவினால் தயாரிக்கப்பட்ட இந்தபிஸ்கட்டுக்கள்பாடசாலைமாணவர்களுக்கு வழங்கப்படுவதற்கான முன்னெடுப்புக்கள் மே ற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிகழ்வில் பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் வைத்தியர் எம்.பீ.ஏ வாஜித், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ஆசாத் எம். ஹனிபா, தி ட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தி யர் எம்.சீ.எம். மாஹிர், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் திட்டமிடல் வைத்தியர் ஏ. ஆர்.நியாஸ், நிருவாக உத்தியோகத்தர் கே.ஏ. ஜப்பார் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண டனர்.







# மட்டு. மண்முனைப்பற்றில் கலாசார, இலக்கிய விழா!

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மண்முனைப்பற்று பிரதேச செயலகமும் கலாசார பேரவையும் கலாசார அதிகார சபையும் இணைந்து நடத்திய கலாசார மற்றும் இலக்கிய விழா நிகழ்வு நந்தகோபன் கலாசார மண்டபத்தில் ம ண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி.சத்தியானந்தி நம சிவாயம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் கே.கருணாகரன் கலந்து சிறப்பித்தார். சிறப்பு அதிதி யாக மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. சுதர்சினி ஸ்ரீகாந்தும், கௌரவ அதிதிகளாக சுகாதார வைத்திய அதிகாரி த.பிரபாசங்கர், கோட்டக்கல்வி அதிகாரி சீ.தில்லைநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர். மண்முனைப்பற்று பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திருமதி. எல்.விவேகானந்தராஜ், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. எம்.ஜெயசந்திரன், பாடசாலை அதிபர்கள், பிரதேச கலைஞர்கள், பாடசாலை மாணவர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் இதில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் சிகரம் நூல் வெளியீடும், 8 கலைஞர்களுக்கான கௌரவிப்பும் இடம்பெற்றன. இலக்கிய போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள் மற்றும் கலைஞர்க ளுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டன.

# சேருநுவரவில் யானை தாக்கி தமிழ் குடும்பஸ்தர் உயிரிழப்பு!



திருகோணமலை – சேருநுவர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தங்கநகர் பகுதியில் உள்ள காட்டுப்பகுதியில் நேற்று அதிகாலை யானை தாக்குதலுக்கு உள்ளாகி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் சேருநுவர – தங்கநகர் பகுதியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தை யான குணசேகரம் இராசநாய கம் ( வயது 48) என்பவரே உயிரிழந்தார் எனப் பொலி ஸார் தெரிவித்தனர்.

இவர் குளமொன்றுக்குச் சென்று மீன் பிடித்துவிட்டு வீடு நோக்கி திரும்பிக் கொண்டி ருக்கும்போது இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக தி ருகோணமலை பொது வைத்தி யசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. சம்ப வம் தொடர்பிலான மேலதிக விசாரணை களை சேருநுவர பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# லெபனானில் ஏற்பட்டுள்ள நிலைமை இலங்கையிலும் ஏற்பட வாய்ப்புள்ளது!

## பிரித்தானிய பல்கலை சிரேஷ்ட விரிவுரையாளர் எச்சரிக்கை

பொருளாதார நெருக்கடியை போக்க அரசாங்கம் உடனடியாக செயற்படாவிட்டால் லெபனானில் ஏற்பட்டுள்ள நிலைமை இலங்கையிலும் ஏற்பட வாய்ப்புள்ளதாக பிரித்தானிய ரீடிங் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் சாந்த ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

லெபனான் மற்றும் இலங்கையின் நிலைமையை ஒப்பிட்டு அவர் எழுதிய நீண்ட கட்டுரையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கட்டுரையில், 'லெபனானின் வங்கி அமைப்பு காலவரையின்றி மூடப்பட்டுள்ளது. காரணம், வங்கிகள் வாடிக்கையாளர்களின் சேமிப்புத் தொகையை செலுத்த முடியாமல் திணறுகின்றன.

இதனால் ஆத்திரமடைந்த மக்கள் வங்கிகளை கொள்ளையடிக்கவும், வங்கி ஊழியர்களை பணயக்கைதிகளாக பிடிக்கவும் தொடங்கியுள்ளனர்.

தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலைக்கு அரசு பாதுகாப்பு அளிக்க முடியாததால், உறுப்பினர்களின் பாதுகாப்பை கருத்திற்கொண்டு வங்கிகளை மூட வங்கி சங்கங்கள் முடிவு செய்துள்ளன.

இதனால், பணத்தை வைப்பிலிட்டவர்கள் தங்கள் வங்கிகளில் நம்பிக்கை இழக்கும்போது, அவர்களது பணம் அனைத்தும் மணிநேரங்கள் அல்லது நாள்களுக்குள் திரும்பப் பெறப்படும். இதை ஆங்கிலத்தில் டீயமெ சுரனெ என்பார்கள். அதுதான் லெபனானில் நடந்தது. வங்கிகளில் பணப்புழக்கம் இல்லாதபோது, அது முழு நிதி அமைப்பையும் பாதிக்கிறது.

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு வழங்கிய பரிந்துரைகளில் இந்த ஆபத்து சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தப் பரிந்துரையை அடுத்து, இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் அரச வங்கியின் 20 வீத பங்குகளை விற்க ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்மொழிந்தார்.

வங்கிகளின் மூலதனத்தை அதிகரிப்பதில், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளை எதிர்கொள்ள முடியும். இல்லையெனில், அரசு வங்கிகளை தனியார் மயமாக்குவதற்கான முதல் படியாக இது இருக்கலாம்.

லெபனானின் 65 லட்சம் மக்களில் 80 வீதம் பேர் தற்போது வறுமையின் அடிமட்டத்தில் உள்ளனர். இந்நாட்டு அரசால் இதுவரை மக்களின் அடிப்படைத் தேவைகளை வழங்க முடியவில்லை.

லெபனானில் 23 மணி நேரமும் மின்சாரம் துண்டிக்கப்படுவதால் மக்களுக்கு அத்தியாவசிய மருந்துகள் மற்றும் உணவுகூட வழங்க முடியவில்லை.

ஆட்சியாளர்களின் திருட்டு, ஊழல், பணமோசடி, நிதி ஒழுக்கமின்மை என்பனவே, இவை அனைத்துக்கும் காரணம் என சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டிறது. இலங்கையின் தற்போதைய நிலைமை அதற்கு மிக அருகில் இல்லையா? இது வரை இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் உற்பத்தி பொருளா தாரம் என்று தம்பட்டம் அடித்துக் கொண் டார்கள், ஆனால் அதை மேம்படுத்து வதில் ஆர்வம் காட்டவில்லை.

மாறாக, இறக்குமதி செய்து நாட்டு மக்களை திருப்திப்படுத்துவதன் மூலம் தங்கள் கைக்கூலிகளின் பைகளை நிரப்ப முயன்றனர்.

தொடர்ச்சியான நிபந்தனைகளின் கீழ் லெபனானுக்கு 300 கோடி டொலர் கடனை வழங்க சர்வதேச நாணய நிதியம் ஒப்புக் கொண்டுள்ளது.

அவர்கள் முன்வைத்துள்ள நிபந்தனைகளின் தொடரில் உள்ள நிபந்தனைகளில் ஒன்று ஊழலைத் தடுப்பது.

லெபனானின் காபந்து அரசாங்கம் மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்று வருகிறது, ஆனால் அவர்களால் இது வரை நிலையான அரசாங்கத்தை அமைக்க முடியவில்லை.

அதன் காரணமாக சர்வதேச நாணய நிதியம் வழங்கிய விரிவாக்கப்பட்ட நி[...] வசதியை 4 ஆண்டுகளாக அவர்களா[...] பெற முடியவில்லை. இதனால், இலங்[...]கையின் பொருளாதார நெருக்கடிக்கு[...] லெபனானின் பொருளாதார நெரு[...]கடிக்கும் பல ஒற்றுமைகள் இருக்கி[...]றமையைக் காணலாம்.

வெளிநாட்டுப் பணம் பெறப்படா[...]தால், இலங்கையின் பொருளாதார[...] வீழ்ச்சியடைந்து வருகிறது.

சுற்றுலாத்துறை முற்றிலுமா[...] நலிவடைந்துள்ளதால் டொலர்கள்[...] வருவதில்லை என முறைப்பாடுகள்[...] தெரிவிக்கின்றன. இலங்கையின் கடன்[...] (உள்நாட்டு மற் றும் வெளிநாட்டு[...] ஆயிரம் கோடியே 90 லட்சம் டொலர்கள்[...] ஆகும். சர்வதேச நாணய நிதியத்தின்[...] நிபந்த னைகளுக்கு அமைய[...] அரசாங்கத்தின் வருமானத்தை அதி[...]கரிக்க அரசாங்கம் மறைமுக வரிகளை[...] அதிகரித்துள்ளது. எரிபொருள் ப[...]ானியங்கள் நீக்கப்பட்டு அவற்றின்[...] விலைகள் அதிகரிக்கப்பட் டுள்ளன.

ஆனால் ஊழலைத் தடுக்க எந்[...] நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை[...] ஊழலைத் தடுக்க வேண்டும் என்பது[...] சர்வதேசநாணயநிதியத்தின் நிபந்தனை[...]யாகும்.- என அவர் மேலும் தெரிவி[...]துள்ளார்.

## கடன் நெருக்கடியை சமாளிக்க அதிகபட்ச ஆதரவு வழங்கப்படும்

### பரிஸ் கிளப் தெரிவிப்பு



இலங்கையின் தற்போதைய கடன் நெருக்கடியை சமாளிக்க அதிகபட்ச ஆதரவு வழங்கப்படும் என இருபத்திரண்டு கடன் வழங்கும் நாடுகளின் குழுவான பரிஸ் கிளப் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக இராஜாங்க அமைச்சர் ஹெஹான் சேமசிங்க, நேற்று (திங்கட்கிழமை) ருவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

இலங்கையின் கடன் நெருக்கடிக்கு விரைவில் தீர்வு காணும் முயற்சிகளுக்கு முழுமையான ஆதரவை வழங்குவதாக பரிஸ் கிளப்பின் இணைத் தலைவர் வில்லியம் ரூஸ் உறுதியளித்தார் என அவர் அந்தப் பதிவில் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் வருடாந்தக் கூட்டங்களின் போது பரிஸ் கிளப்பின் இணைத் தலைவர் வில்லியம் ரூஸை சந்தித்த போதே அவர் இந்த வாக்குறுதியை வழங்கினார் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## போதை மாத்திரைகளுடன் மூவர் ஏழாலையில் கைது!

யாழ்ப்பாணம் ஏழாலை பகுதியில் போதை மாத்திரைகளுடன் மூவர் இராணுவ புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டு சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த மூவரும் கைது செய்யப்பட்டதுடன் அவர்களிடம் இருந்து 296 போதை மாத்திரைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட மூவரையும் மேலதிக நடவடிக்கைக்காக, இராணுவ புலனாய்வு பிரிவினரால் சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இந்த மூவரும் போதைப்பொருள் விற்பனை முகவர்கள் என தாம் சந்தேகிக்கப்படுவதாகவும், மூவரிடமும் தொடர் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## வல்லையில் தொடரும் வழிப்பறிக் கொள்ளை!

### பொலிஸார் பாராமுகம்

யாழ்ப்பாணம் வல்லை வெளி பகுதியில் தொடர் வழிப்பறி கொள்ளைகள் இடம்பெற்று வரும் நிலையில் அச்சுவேலி பொலிஸார் பாராமுகமாக உள்ளனர் எனப் பல தரப்பினராலும் குற்றம் சாட்டப்படுகிறது.

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஆள் நடமாட்டம் குறைவான வல்லை வெளி பகுதியில் மாலை மற்றும் முன்னிரவு வேளைகளில் மோட்டார் சைக்கிள்களில் நடமாடும் வழிப்பறி கொள்ளையர்கள் பெண்களை இலக்கு வைத்து வழிப்பறியில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த பகுதியில் ஞாயிற்றுக்கிழமை மாலை வேளை யாழ்ப்பாணத்தில் இருந்து, பருத்தித்துறை பகுதிக்கு வல்லை வெளி ஊடாக மோட்டார் சைக்கிளில் பயணித்த வயோதிப பெண்ணின் 5 பவுண் நகை கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

அவர்களின் மோட்டார் சைக்கிளை பின் தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் வந்த இரு வழிப்பறி கொள்ளையர்கள் வல்லை பகுதியில் மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்து பயணித்த வயோதிப பெண்ணின் தாலிக்கொடியை இழுத்து அறுத்துக்கொண்டு தப்பி சென்றுள்ளனர்.

அதனால் வயோதிப பெண் பயணித்த மோட்டார் சைக்கிள் நிலைதடுமாறி விபத்துக்கு உள்ளானது. அதனால் அதில் பயணித்த வயோதிப பெண் உள்ளிட்ட இருவர் காயமடைந்த நிலையில், யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர். மேற்படி பகுதியில் கடந்த ஒரு வார காலப் பகுதிக்குள் ஐந்துக்கும் மேற்பட்ட வழிப்பறி சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

கடந்த வாரம் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு பெண்களை அந்தப் பகுதியில் வழி மறித்த வழிப்பறி கொள்ளையர்கள் கத்தி முனையில் அவர்களிடம் இருந்து 11 பவுண் நகை மற்றும் பெறுமதியான கையடக்க தொலைபேசி[...] என்பவற்றைக் கொள்ளையடித்து தப்பி[...] சென்றுள்ளனர். அதுபோன்று வேலை[...] முடித்து வீடு செல்லும் நோக்குடன்[...] குறித்த பகுதிக்கு அண்மையில் உள்ள[...] பஸ் தரிப்பிடத்தில் நின்ற பெண்ணொரு[...]வரின் தங்க சங்கிலி ஒன்றும் வழிப்பறி[...] கொள்ளையர்கள் அறுத்து சென்றனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் மோ[...]ட்டார் சைக்கிளில் பயணித்த[...] பெண்ணின் சங்கிலியை பிறிதொரு மோ[...]ட்டார் சைக்கிளில் வந்த வழிப்பறி[...] கொள்ளையர்கள் அறுத்து சென்றனர்.

அதேவேளை குறித்த வழிப்பறியில்[...] ஈடுபடும் கொள்ளை கும்பலை சேர்ந்த[...]வர்கள் மோட்டார் சைக்கிள்களை திருடி[...] வழிப்பறியில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த வாரம் வல்வெட்டித்துறை[...] பகுதியில் திருடிய மோட்டார் சைக்கிளை[...] பயன்படுத்தி பருத்தித்துறை பகுதியில்[...] வழிப்பறி கொள்ளையில் ஈடுபட்[...]டுள்ளனர். வடமராட்சி பகுதிகளில் கடந்த[...] ஒரு வார காலப்பகுதிக்குள் 10 இற்கும்[...] மேற் பட்ட வழிப்பறி கொள்ளை[...] சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இந்த சம்பவங்களுடன் தொடர்[...]டைய குற்றத்தில் கடந்த 14ஆம் திகதி [...] பவுண் தாலி, 2 பவுண் சங்கிலி, மோட்[...]டார் சைக்கிள், ஐ. போன் மற்றும் [...]கிராம் ஹெரோயின் போதைப்பொருள்[...] என்பவற்றுடன் வடமராட்சி அல்வாய்[...] பகுதியை சேர்ந்த 23 வயதான இளை[...]ஞன் பருத்தித்துறை பொலிஸாரால்[...] கைது செய்யப்பட்டு, பொலிஸ் நிலையத்[...]தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு[...] உட்படுத்தப்பட்டு வந்த சமயம் மறுநாள்[...] சனிக்கிழமை மேற்படி நபர் பொலிஸ்[...] நிலைய மலசல கூட ஜன்னல் வழியாக[...] தப்பி சென்றுள்ளார். தப்பி சென்ற நபரை[...]யும், அவரது கும் பலை சேர்ந்தவர்களு[...]ம் தலைமறைவாகி யுள்ள நிலையில் பொலி[...]ஸார் அவர்க ளைக் கைது செய்வதற்கு[...] உரிய நடவடிக் கையை தீவிரப்படுத்தி[...] உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## கிழக்கு.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டளை 27(2) இன் கீழ் அரசிடம் பலகேள்விகளையும்அவர்எழுப்பினார்.

இது தொடர்பில் அவர் உரையாற்றும்போது தெரிவித்ததாவது:-

இலங்கையில் அனுராதபுரம், பொலனறுவை, அம்பாந்தோட்டை, குருநாகல் போன்ற மாவட்டங்களில் நெற் செய்கை பாரியளவில் மேற்கொள்ளப்பட்டாலும் நாட்டின் மொத்த அரிசி உற்பத்தியில் நான்கில் ஒரு பங்கை (25%) கிழக்கு மாகாணமே வழங்குகின்றது.

இருப்பினும், பிற பகுதிகளுடன் ஒப்பிடும்போது இந்தப் பகுதிகளில் விதைப்பு மற்றும் அறுவடை முன்கூட்டியே செய்யப்படுவதால், அந்த விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களுக்கு உரிய விலையும், பயிர்களுக்குத் தேவையான உரங்களின் அளவும் சரியான நேரத்தில் கிடைப்பதில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

முந்தைய அரசின் அறிவியல் பூர்வமற்ற முடிவுகளால் ஒட்டுமொத்த விவசாயமும் கடும் வீழ்ச்சியைச் சந்தித்துள்ளதோடு, இன்றும் ஒட்டுமொத்த மக்களும் அதன் விளைவுகளை அனுபவித்து வருகின்றனர்.

சிறு/பெரும் பிரதான போகங்களுக்கும் மேலதிகமாக பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் இந்த விவசா- யிகளுக்குத் தேவையான வசதிகளை செய்து கொடுப்பதன் மூலம் வீழ்ச்சியடைந்த விவசாயத்துக்கு மறுமலர்ச்சியை ஏற்படுத்த முடியும். மேலும், இது வேகமாக அதிகரித்து வரும் அரிசி விலையைக் கட்டுப்படுத்தி, சந்தையில் அரிசிக்கு நிலையான விலையை ஏற்படுத்தவும் உதவும்.

அதற்கிணங்க, இதனை தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாகக் கருதி, அரசிடமிருந்து பின்வரும் கேள்விகளுக்கு குறிப்பிட்ட பதில்களையும் விளக்கங்களையும் எதிர்பார்க்கின்றேன்.

01. அம்பாறை, மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களில் சிறு மற்றும் பெரும் போக பருவங்களில் நெல் அறுவடை முதலில் பெறப்படுவதால் அறுவடைக்குஉரியவிலைகிடைப்பதில்லை எனவும், விற்பனை செய்வதும் சிரமமாகவே உள்ளது எனவும் விவசா- யிகள் கூறுகின்றனர். அப் பகுதிகளிலும் பிற பகுதிகளிலும் நெல் அறுவடையை முறையான முறைப்படி கொள்வனவு செய்வதற்குரிய தடைகள் என்ன? அந்தத் தடைகளை நீக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன?

02. கிழக்கு மாகாணத்தில் சிறு/ பெரும் போக பருவங்களுக்கு முன்னர் பயிர்ச்செய்கைகளை மேற்கொண்டு வரும் விவசாயிகளுக்குத் தேவையான உரங்கள் உரிய நேரத்தில் கிடைப்பதில்லை என விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இந்த நிலையைத் தவிர்க்க அரசு என்ன நடவடிக்கைளை மேற்கொண்டுள்ளது?

03. 2022/23 பெரும் போக பருவ நெற்செய்கைக்குத் தேவையான உரங்களின் அளவு என்ன? அவற்றில் எந்தளவு தொகை தற்போது நாட்டில் கையிருப்பில் உள்ளது? மீதமுள்ள தொகையைப் பெற எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன? அந்த உரங்களை விவசாயிகளுக்கு வழங்கி வைக்க முடியுமான கால எல்லை யாது?

04. தற்போதைய அரசின் விவசாய கடன்களைத் தள்ளுபடி செய்யும் தீர்மானமானது ஒரு ஏக்கர் வரை விவசாயம் செய்த விவசாயிகளுக்கு மாத்திரமா செல்லுபடியாகும்? அப்படியானால், ஒரு ஏக்கருக்கு அதிகமாக மேற்கொண்ட பயிர்களுக்குக் கடன் தள்ளுபடியை வழங்க முடியாதா? இதன் கீழ் தனியார் வங்கிகளின் ஊடாக பெற்ற விவசாயக் கடன்களும் தள்ளுபடி செய்யப்படுமா? அவ்வாறு இல்லையென்றால், அந்த விவசாயிகளுக்காக அரசால் எடுக்க முடியுமான நடவடிக்கைகள் என்ன?

05. காட்டு யானைகள் உள்ளிட்ட வன விலங்குகளால் நெல் மற்றும் இதர விவசாய பயிர்களுக்கு ஏற்பட்ட சேதம் குறித்து மதிப்பீடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதா? அப்படியானால், மொத்த உற்பத்தியில் சதவீதமாக அந்தத் தொகை எவ்வளவு? அதைத் தடுக்க அல்லது குறைக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாது? அவ்வாறு மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படவில்லையாயின், அதற்கான காரணங்கள் என்ன? உலர் வலய பகுதியிலுள்ள நீர்ப்பாசன வாய்க்கால்களிலும் மணல் அகழ்வு நடப்பதால் நீர்பாசனமும், அப்பகுதிகளிலுள்ள பயிர்ச் செய்கைகளும்கடுமையாகசேதமடைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக விவசாய அமைச்சுக்கோ அல்லது நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கோ தெரியுமா? இந்த மணல் கடத்தலைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? - என்று அரசிடம் கேள்விகளைத் தொடுத்தார் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்:-
076 443 8622

## போராட்ட.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபை உறுப்பினரும் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வசந்த யாப்பா பண்டார தெரிவித்தார்.

பேராதனையில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போது அவர் மேலும் தெரிவித்தாவது:-

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அரசு மேற்கொண்ட பொருளாதாரக் கொலைக்கான தண்டனையைப் பொதுமக்களே இன்று அனுபவிக்கின்றனர். வரிக்கு மேல் வரி விதிக்கப்பட்டு வற் வரி மட்டும் 17.5 வீதம் வரை மறைமுகமாகச் செலுத்தப்படுகின்றது.

'மொட்டு' அரசு பதவிக்கு வந்தபோது ஒரு திறமைமிக்க ஜனாதிபதி செயலாளர் நியமிக்கப்படுவார் என்று எதிர்பார்த்தோம். ஆனால், 2008 ஆம் ஆண்டு உயர் நீதிமன்றம் தடை விதித்த ஒருவரையே ஜனாதிபதி செயலாளராக நியமித்தனர். அதன் விளைவுகளை இன்று வரை அப்பாவிப் பொதுமக்கள் அனுபவித்து வருகின்றனர்.

அதேபோல் 'மொட்டு' அரசு ஆட்சிக்கு வந்ததும் வரிச் சலுகை வழங்கியது. அதனால் அரசுக்குச் சேர வேண்டிய வரிப்பணமான 600 ட்ரிலியன் ரூபா கிடைக்காமல்போனது. இதுவும் மாபெறும் தவறாகும்.

நாட்டின் பொருளாதாரத்தைக் கொலை செய்தவர்கள் சிலர், தற்போதும் அரசினுள் இருந்து கொண்டே நாட்டை நிர்வகிக்கின்றனர்.

கொரோனாத் தொற்றின் போது வெளிநாட்டு அன்பளிப்பாகக் கிடைக்கப் பெற்ற 800 மில்லியன் யூ.எஸ். டொலர் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டது. அது சென்ற இடமும் தெரியவில்லை என்றே கூறவேண்டும்.

இவை போன்ற காரணங்கள்தான் இந்த நாட்டை வங்குரோத்து நிலைக்கு இட்டுச் சென்ற காரணிகளாகும்.

வரி அறவிடுவதில் தவறில்லை. ஆனால், பொதுமக்கள் கழுத்தை நெறித்து, கசக்கிப் பிழிந்து வரி அறவிடுவதுதான் தவறாகும்.

மக்களுக்குச் சகாயம் வழங்க வேண்டிய அரசு மக்களைச் சிரமத்துக்கு உள்ளாக்கி வரிச்சுமையை மேலும் மேலும் அதிகரித்துச் செல்வதை அனுமதிக்க முடியாது.

சாதாரணமாக ஒரு வைத்தியர் அல்லது காரியாலயத்தில் உள்ள பரிபாலன அதிகாரி மாதம் ஒரு இலட்சத்துக்கு மேல் சம்பளம் எடுக்கலாம். அவரும் வருமானவரிசெலுத்தவேண்டியுள்ளது.

இவ்வாறு வருமான வரி எல்லையைக் கண்மூடித்தனமான உயர்த்துவதால் உள்ளூர் உற்பத்தியாளர்கள் வரி செலுத்த முடியாது தமது உற்பத்திகளைக் கைவிடுவர்.

வெளிநாட்டு முதலீட்டாளர்களும் தமது முதலீட்டைக் கைவிட்டு வெளியேறிவிடுவர். இதனால் தொழிற்சாலைகள் மூடப்பட்டு பலர் தொழிலை இழக்கலாம். காரியாலயப் பரிபாலன அதிகாரிகள் தமது தொழிலைக் கைவிட்டு வெளி நாடுகளுக்குச் சென்று விடலாம். இந்த ஆபத்துக்களில் இருந்து நாட்டை மீட்க வேண்டும்.

நாடாளுமன்றில் தற்போது எதிர்க் கட்சிக்கு 108 ஆசனங்கள் வரை இருக்கின்றன என்று கருதுகின்றோம். எனவே, காலப் போக்கில் நல்லதொரு ஆட்சியை ஏற்படுத்தக்கூடிய ஒரு குழுவை வெகுவிரைவில் ஏற்படுத்தி ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்படலாம் என எதிர்பார்க்கின்றோம் -என்றார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.10.2022இல் வெளியிடப்பெற்றது.